# விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.அ.நாராயணமூர்த்தி, M.A.,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,

இடம் : விருதுநகர்.

**செயல்முறை ஆணை எண் அ1/994/2019, நாள்: 22.03.2020.**

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்புப்பிரிவு- நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி-IVபணிகள் - 2015-2016, 2016-17 மற்றும் 2017-2018-ஆம் ஆண்டுக்கான தட்டச்சர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டது - சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு - திருமதி.லெ.மகாலெட்சுமி என்பவர் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை - பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் -தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண் 1711/PSD-A/2019, நாள் 20.02.2019
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செ.மு.ஆ.எண் நி்ர.2/3664/2019, நாள் 04.03.2019
3. விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரின் செ.மு.ஆ.எண் அ1/994/ 2019, நாள்: 05.03.2019
4. அரசாணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்.) துறை, நாள் 22.07.2008.
5. திருமதி.லெ.மகாலெட்சுமி, தட்டச்சர் அவர்களின் விண்ணப்பம் நாள்: 13.11.2019

---00000---

**ஆணைகள்:**

பார்வை (1)- இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி–IV-இல் அடங்கிய தட்டச்சர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டு, விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.லெ.மகாலெட்சுமி அவர்களுக்கு பார்வை 3-இல் காணும் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அவர் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 06.03.2019 அன்று முற்பகல் தற்காலிகத் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தார்.

-த.பி.பா.-

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 05.03.2020 பிற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து, திருமதி.லெ.மகாலெட்சுமி, தட்டச்சர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முதல் தட்டச்சர் பதவியில் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

திருமதி.லெ.மகாலெட்சுமி, தட்டச்சர் அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவக்காலத்தில், பார்வை 4-இல் காணும் அரசாணையின்படி, தனியர் தமிழ்நாடு அரசு தொழிற்கல்வித் துறையால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். பார்வை (5) இல் காணும் விண்ணப்பத்தின் வாயிலாக தனியர் தமிழ்நாடு அரசு தொழிற்கல்வித் துறையால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
விருதுநகர்.

பெறுநர்

திருமதி.லெ.மகாலெட்சுமி,
தட்டச்சர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
விருதுநகர்.

<u>நகல்</u>

1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35